பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 10 ஞாயிற்றுக்கிழமை 27.10.2024 கதிர் 350

## இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும்தினம்ஓரிருநாட்களுக்குத் தள்ளிப் போக வாய்ப்புள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி தேர்தலுக்கான நாளைத்தெரிவுசெய்ததில்ஏற்பட்டுள்ள சிக்கலே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டத்தின்படி, ஒக்டோபர் 4 முதல் ஒக்டோபர் 11 வரை நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தன. வேட்புமனுக்கள்ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து ஐந்து வாரங்களுக்குக் குறையாமலும் ஏழு வாரங்களுக்கு மிகாமலும் வாக்குப்பதிவுக்கான திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும் எனச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, வேட்புமனு தாக்கல் முடிவடைந்த ஒக்டோபர் 11 முதல் கணக்குப் பார்த்தால் ஐந்து ☞ 2



## இஸ்ரேலில் அவதானமாக இருக்குக இலங்கையர்களுக்கு அறிவுறுத்தல்

இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்களுக்குபயணத்தைகுறைக்குமாறும் பணியிடங்களில்மிகவும்அவதானமாக இருக்குமாறும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார அறிவுறுத்தியுள்ளார்.

அங்கு எதிர்காலத்தில் 'ட்ரோன்' மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடக்கலாம்என்றுஎதிர்பார்க்கப்படுவதால், இலங்கையர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என தூதுவர் அறிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு போர்ப் பதற்றம் காரணமாக, ஈரான், ஈராக், லெபனான், சிரியா மற்றும் இஸ்ரேலுக்கான விமானப் பாதைகள்தடைசெய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும்கூறினார்.

இதேவேளை, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள மோதல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அங்கு தங்கியுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார ☞ 2

### முன்னாள் இராஜாங்க அமைச்சர்

## லொஹானின் மனைவி வீட்டிலிருந்து இலக்கத் தகடற்ற சொகுசுக் கார் மீட்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவிக்கு சொந்தமான வீட்டில் பதிவு இலக்கத் தகடுகள் இல்லாத கார் ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்த தனது பிரத்தியேக செயலாளரே குறித்த வாகனத்தை வீட்டின் வாகன தரிப்பு கராஜுக்கு கொண்டு வந்து நிறுத்தியிருந்தார் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும்அவரதுமனைவியும் ☞ 8

## கொழும்பு – யாழ். இடையிலான தொடருந்து சேவை ஒக். 28இல்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தொடருந்து சேவை ஒக்டோபர் 28 முதல் தொடங்கும் என்றுதொடருந்துத்திணைக்களம்அறிவித்துள்ளது.மஹவ மற்றும் அநுராதபுரம் இடையிலான தொடருந்துப் பாதை நவீனமயப்படுத்தப்பட்டதன் பின்னர் கொழும்பு ☞ 2

## அடுத்த வருடத்திற்குள் மாகாண சபை தேர்தல்

### ஜனாதிபதி அறிவிப்பு

மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடத்திற்குள் நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய ☞ 8

### சர்வதேச நாணய நிதியத்தின்

# மூன்றாவது கடன் நிதி விடுவிப்பு தாமதமாகும்

### வோஷிங்ரனில் பேச்சு தொடர்கிறது

கடன்வசதித்திட்டத்தின்மூன்றாவது மீளாய்வு மற்றும் மூன்றாவது தொகுதி கடன் விடுவிப்பு தாமதமாகும் அறிகுறிகள் தென்படுகின்றன.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை மேற்கோள்காட்டி வெளிநாட்டு ஊடகங்கள்மூன்றாவதுமீளாய்வின்தாமதம் குறித்த தகவலை வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா சென்றுள்ள மத்திய வங்கி நிறுவனத்திடம்பேசும்போதுதாமதம்குறித்துப் பேசியுள்ளார். இந்த ஆண்டு இறுதிக்குள் மூன்றாவது மீளாய்வு நடைபெறவேண்டும், ஆனால்அதற்கானதிகதிகள்இன்னமும்முடிவு செய்யப்படவில்லைஎன்றுஅவர்ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடனான கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் ☞ 2

## நாடாளுமன்ற தேர்தலில் முதல் திருநங்கை போட்டி

இலங்கை சோசலிஸ்ட் கட்சியின் மகளிர் விவகார செயலாளர் சானு நிமேஷா, இலங்கையில் தேர்தலில் போட்டியிட்ட முதல் திருநங்கை என்ற வரலாற்றை படைத்துள்ளார்.

நிமேஷா கேகாலை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

ஊ பொதுத் தேர்தலில் போட்டியிட எனக்கு வாய்ப்பளித்த இலங்கை சோசலிசக் கட்சிக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், முதன்முறையாக தேர்தலில் ☞ 2

## பிரதமரின் கவலை

பிரதமர் திருமதி ஹரிணி அமரசூரிய தான் பதவியேற்றதன் பின்னர் தனது வாழ்க்கை அவ்வளவு இலகுவானதாக இல்லை எனக் கவலைப்பட்டுள்ளார். இப்போதெல்லாம் தன்னால் எளிதில் பயணிக்க முடிவதில்லை என்றும் ☞ 2



## பருத்தித்துறையில் கைக்குண்டுகள் மீட்பு

பருத்தித்துறையில் நீண்ட நாள்களாகப் பாவனையின்றிக் காணப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து பெருமளவிலானகைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை துறைமுகத்தை ☞ 11

## வரவு செலவுத் திட்டதிற்காக நாணய நிதியத்துடன் பேச்சு

### ஜனாதிபதி தெரிவிப்பு

எதிர்வரும் வருடத்திற்கான சிறந்த வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்க சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

பொருளாதார ஆலோசகர் உள்ளிட்ட நிதி அமைச்சக அதிகாரிகள் நிதியுடன் ஏற்கனவே இது தொடர்பில் பேச்சு நடத்தி வருகிறார்என்றும்அவர்கூறினார்.

இரத்தினபுரியில்தேசியமக்கள் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பரப்புரையில்உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

'சிறந்த வரவு செலவுத் திட்டத்தைத்தயார்செய்ய. எங்கள் முன்மொழிவுகள் பற்றி எங்கள் பொருளாதார ஆலோசகர் ஒருவர் உட்படநிதிஅமைச்சகத்தின் ☞ 8

## அரிசி இருப்பு கணக்கெடுப்பு

நாட்டில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அரிசியின் இருப்புதொடர்பில்கணக்கெடுப்புதொடங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக நுகர்வோர் விவகார ☞ 2

### ஈபிடிபியை அநுர அணைக்கிறார் என்றால்

## ஜேவிபி குறித்துத் தமிழர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்

### கஜேந்திரன் எச்சரிக்கை

1994ஆம் ஆண்டில் இருந்து தொடர்சியாகக்குற்றச்செயல்கள் புரிந்து ஆட்சியாளர்களுடன் இணைந்து இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்த ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வார கால அவகாசம் நவம்பர் 15தான் முடிவடையும். ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29 நிறைவடையும். ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் நவம்பர் 14 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திகதி சட்டக் காலப்பகுதிக்குள் உள்ளடக்கப்படாததால், அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது என்று தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் ஏற்கனவே ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையமும் கவனம் செலுத்தியுள்ளதாக அறியமுடிகிறது. தீவிர சட்ட ஆலோசனைக்கு பின், நாடாளுமன்றத் தேர்தல் திகதியை மாற்றி அந்த விவரத்தை நீதிமன்றில் தெரிவிக்க அரச தரப்பினர் தயாராகிவவருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, புதிய தேர்தல் திகதி குறிப்பிட்டுபட்ட புதிய வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அநுர ஆட்சியின் முதல் நடவடிக்கையே இப்படிக் கோணலாக முடிந்துவிட்டது குறித்து தேசிய மக்கள் சக்திக்குள்ளேயே ஒரு கசப்புணர்வு பரவ ஆரம்பித்துள்ளது.

........................

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் ஊழல், மோசடிக்கு எதிராகக் கடுமையாகப் பேசி வந்தார். இது தொடர்பில் புதிய சட்டங்களைத் தான் அறிமுகப்படுத்தினார் என்று மார் தட்டிக்கொண்டார். ஆனால் அவரது ஆட்சிக் காலப் பகுதியிலேயே அரசியல்வாதிகள் மேற்கொண்ட வாகன மோசடிகள் ஒவ்வொன்றாக இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

டொலர் இருப்புப் பற்றாக்குறை காரணமாக வாகன இறக்குமதிகளை இலங்கை அரசு நிறுத்தி வைத்துள்ளது. வாகனங்களின் இறக்குமதிக்குப் பெருமளவு டொலர்களை விடுவித்தால் நாட்டின் அத்தியாவசியத் தேவைகளைச் சமாளிக்க முடியாது என்பதே அதற்குக் காரணம்.

அந்தத் தடை அப்படியே இருக்க, பழம் இருக்க சுளை விழுங்கி மகாதேவன்களாக அரசியல்வாதிகள் புதிய பல கோடி ரூபாய்கள் பெறுமதியான சொகுசு கார்களை இறக்குமதி செய்து சொகுசு அனுபவித்திருக்கிறார்கள் என்பது இப்போது அம்பலமாகி வருகின்றது. வாகன இறக்குமதிக்குத் தடை இருந்த காரணத்தால் இந்தக் காலப் பகுதிக்குள் இறக்குமதி செய்யப்பட்ட புதிய வாகனங்களை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் அரசியல்வாதிகளால் பதிவு செய்யமுடியவில்லை. அதற்கென்ன நாம்தானே ஆட்சியாளர்கள் என்கிற திமிரில் பதிவு செய்யாத வாகனங்களில் பொய்யான இலக்கத் தகடுகளுடன் ஓடித் திரிந்திருக்கிறார்கள்.

எதிர்பாராத விதமாக தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்குவந்ததும் வாகனங்களை ஆங்காங்கே கொண்டு சென்று மறைத்துவைத்துவிட்டுப் பதுங்கிக் கொண்டார்கள். ஆனால், ஊழல் அரசியல்வாதிகளின் மோசடிகளை ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் ஆளும்தரப்பு இந்த வாகன விவகாரத்தை ஒவ்வொன்றாகக் கிளறத் தொடங்கியிருக்கிறது. அதில் முதலாவது வாகனம் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவினுடையது என்கிற குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத்தொடரில் இரண்டாவது வாகனத்தை அதிகாரிகள் நேற்றுக் கண்டுபிடித்தனர். முன்னாள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டித் தனது கால்களில் விழவைத்து நண்பர்களுக்கும் நண்பிகளுக்கும் முன்பாகக் கெத்துக் காட்டிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயின் மனைவியின் வீட்டில் இருந்து இந்த வாகனத்தைப் பொலிஸார் கைப்பற்றி இருக்கின்றனர்.

இந்த வீட்டில் லொஹானின் மனைவியின் வயோதிபத் தாயார்தான் வசித்து வருகின்றார். அங்கே இந்த வாகனத்தை லொஹானின் முன்னாள் பிரத்தியேகச் செயலாளரை கொண்டு வந்து நிறுத்தினார் என்று லொஹானும் அவரது மனைவியும் சொல்லி வைத்தால்போல் பொலிஸாரிடம் வாய் திறந்திருக்கிறார்கள். அந்தத் தனிப்பட்ட செயலாளர் ஓரிரு நாட்களின் -முன்பாகத்தான் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இலக்கத் தகடும் இன்றி சாவியும் இன்றி நின்றிருந்த அந்த வாகனத்தைப் பொலிஸார் நேற்றே அலேக்காகத் தூக்கிச் சென்றுவிட்டனர். சிறைக் கைதிகளிடம் கெத்துக் காட்டிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் இப்போது பொலிஸார் முன் அந்த வாகனத்திற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்று சத்தியம் செய்யாத குறையாகக் கதறுகின்றாராம். ஆனா-ம் இந்த விவகாரம் தொடர்பில் விரைவில் அவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும் சாத்தியங்கள் இருக்கின்றன என்கிறன்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மூன்றாவது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

பிணைமுறி உரிமையாளர்களுடன் சில உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்தப் பணிகள் முடிக்கப்படவேண்டி உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த மாத தொடக்கத்தில் கொழும்புக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் மூன்றாவது மீளாய்வுக்கான நாளைக் குறிப்பதற்காக இலங்கையின் பொருளாதாரக் குழுவுடன் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர் என்று தெரிவித்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

இதேவேளை, இலங்கை பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதை சர்வதேச நாணய நிதியம் (IM-F)ஒப்புக்கொண்டுள்ளது.

வோஷிங்டன், டி.சியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஶ்ரீனிவாசன், இலங்கை இன்னும் கணிசமான சவால்களை எதிர்கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

'... நிச்சயமாக, அது முடிவல்ல. சீர்திருத்தங்களைத் தொடர்வதில் இன்னும் நிறைய வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது. ஏனெனில் இலங்கை வலுவான மற்றும் நிலையான மீட்சியின் பாதையில் செல்வதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது' என்று சீனிவாசன் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் கீழ் அடையப்பட்ட கடின வெற்றிகளைப் பாதுகாக்கவும் அதைத் தொடர்ந்து கட்டியெழுப்பவும் புதிய ஆளும்தரப்புக்குள் (அநுரவின் ஆட்சி) ஒருமித்த கருத்து உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்,

'திட்டம் பற்றிய கலந்துரையாடல்கள் தொடர்கின்றன, அவை இந்த வாரம் வோஷிங்டனில் நடக்கும். நாங்கள் இதுவரை கேள்விப்பட்டவற்றால் நாங்கள் ஊக்கமடைகிறோம், விரைவில் வரவிருக்கும் மூன்றாவது மதிப்பாய்வை நோக்கி வேகமாக செல்ல முடியும் என்று நம்புகிறோம்' என்று அவர் கூறினார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நதலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ ஆகியோர் வோஷிங்டன் டி.சி.யில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளனர்.

## பிரதமரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

தனது பாதுகாப்புக்கா நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களைக் குறைப்பது குறித்துக் கலந்துரையாடியபோது, பாதுகாப்புத் தரப்பினர் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்றும் அவர் கூறினார்.

இலங்கை இன்னும் சுவிட்சர்லாந்து, நோர்வே அல்லது சுவீடன் போன்ற நாடாக இல்லை என்று அவர்கள் கூறினர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

## அரிசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரசபையின் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அதிகளவு நெல் வைக்கப்பட்டிருக்கும் களஞ்சியசாலைகள் இந்தத் திட்டத்தின் கீழ் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அதன் அறிக்கை நாளை திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிட திருநங்கை ஒருவரை அவர்கள் நிறுத்தியதன் மூலம் சரித்திரம் படைத்தேன் என்று நிமேஷா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## இஸ்ரேலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் தூதரகங்கள் ஊடாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், தாக்குதல்களால் இலங்கையர் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை எனவும் வெளிவிகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

போர்ப்பதற்றம் காரணமாக இலங்கைக்குத் திரும்ப விரும்பும் மக்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மோதல்கள் காரணமாக இதுவரையில் எந்தவொரு இலங்கையர்களும் நாடு திரும்புவதற்கு கோரவில்லை என வும் வெளிவிகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## அநுரவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டையில் இருந்து காங்கேசன்துறைவரையான தொடருந்து சேவை முறையாக இப்போது தொடங்கப்படவுள்ளது. வடக்குக்கான தொடருந்துப் பாதையை நவீமயப்படுத்தும் பணிகள் இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் மேமற்கொள்ளப்பட்டன. மஹவக்கும் அநுராதபுரத்திற்கும் இடையிலான தொடருந்துப் பாதையைச் செப்பனிடும் பணிகள் பல நாட்களுக்கு முன்பே முடிந்தபோதும், இந்தப் பாதையில் இருந்த சமிக்ஞை விளக்குகளுக்கான மின்னியல் பணிகள் முடிவடையாமல் தாமதமாகி இருந்தன. இதனால் பாதை செப்பனிடப்பட்டு சுமார் ஒரு மாதத்திற்கு மேலாகியும் வடக்குக்கான தொடருந்து சேவையைத் தொடங்க முடியவில்லை. கடந்த ஒகஸ்ட் மாதமளவில் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய திருவிழாவை இந்தச் சேவையைத் தொடங்குவதற்கு தொடருந்துத் திணைக்களம் திட்டமிட்டமிருந்தபோதும் அது சாத்தியமாகி இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்துக்கான தொடருந்துக்களின் சேவை அட்டவணையும் வெளியிடப்பட்டுள்ளது.

## சர்வதேசம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் அமெரிக்காவில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

அந்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது" என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## வாகனங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸில் சாட்சியமளித்துள்ளனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தவிற்கு சொந்தமான மிரிஹான - எம்புல்தெணிய மண்டப வீதியில் அமைந்துள்ள மூன்று மாடி வீடொன்றில் இந்த இலக்கத் தகடுகள் இல்லாத சொகுசு கார் நிறுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகத்திற்கு தகவல் கிடைத்ததை அடுத்து பொலிஸார் அதனைக் கைப்பற்றினர்.

மிரிஹான பொலிஸார் நுகேகொட நீதவான் நீதிமன்றில் தகவல் அறிக்கை தாக்கல் செய்து, குறித்த வீட்டிற்குச் சென்று வாகனத்தை சோதனையிட்டனர். மேலும், முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது மனைவியிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

மேற்படி வீட்டில் முன்னாள் அமைச்சரின் மனைவியின் தாயார் வசிக்கிறார் எனவும், சில தினங்களுக்கு முன்னர் கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட ரத்வத்தவின் பிரத்தியேகச் செயலாளர், குறித்த காரை 3 வாரங்களுக்கு முன்பு அங்கு கொண்டு வந்து நிறுத்தினார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு இலக்கத் தகடுகள் மற்றும் சாவிகள் இல்லாத சொகுசு கார் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது. அரச பரிசோதகர் இன்றைய தினம் வாகனத்தை சோதனைக்கு உட்படுத்த உள்ளார் எனவும் அதன் பின்னர் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வாரியப்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதெனிய - அநுராதபுரம் வீதியில் தங்கஹமுலசந்தியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தவின் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் குறித்த விபத்து இடம்பெற்றதை அடுத்து அங்கிருந்த பொது மக்களுக்கும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கும் இடையில் கடும்வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. வாக்குவாதம் முற்றியதில் இருதரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், விபத்துக்குள்ளான வாகனத்தில் பல ஆயுதங்கள் காணப்பட்டதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால், அவை பாதுகாப்பு அமைச்சில் அனுமதி பெறப்பட்ட கைத்துப்பாக்கிள் என்று பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக வாரியப்பொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குடிபோதையில் தனது நண்பர்களுடன் வெலிக்கடைச் சிறைக்குச் சென்று அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் தலையில் கைத் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக்கொன்றுவிடுவேன் என்று இதே லொஹான் ரத்வத்தை மிரட்டினார் என்பது தொடர்பான வழக்கு நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் உள்ளது.

## கொழும்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் அடுத்த வருடத்திற்குள் நடத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி முறைமை, பலமான அமைச்சரவை, நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கிய பலமான அரசியல் பொறிமுறையொன்றை உருவாக்குவது முக்கியம்" என ஜனாதிபதி தெரிவித்தார்.

'அடுத்த வருடத்திற்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்த திட்டமிட்டுள்ளோம். நகர சபைகள், மாநகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளும்கூட தேர்தலை நடத்தவும் எதிர்பார்க்கிறோம்' என்று அவர் கூறினார்

## ஜேவிபி. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி.டி.பியை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அணைக்கின்றார் என்றால் ஜே.வி.பி. தொடர்பாக தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் அந்தக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டம், வடமராட்சியில் நேற்றுச் செய்திளார்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக, தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடும் ஒரே தலைமை நாம்தான். ஏனைய அரசியல் கட்சிகளும், குழுக்களும் 13ஆவது திருத்தச் சட்டத்தைவலியுறுத்துகின்ற ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டவர்களே!

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வருகின்ற தரப்பு கஜேந்திரகுமார் அணி மாத்திரமே. தமிழ்த்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நடாளுமன்றத் தேர்தல் 2024



# தேர்தல் விதிமுறைகளை மீறியதாக எதிரிகள் வீண் பழி சுமத்துகின்றனர்

## அதாவுல்லா கொந்தளிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

நாம் மத ஸ்தலத்தில் விஷேட பிராத்தனை மேற்கொண்ட விடயத்தினைகாழ்ப்புணர்ச்சிகொண்ட சில எதிர்கட்சிக்காரர்கள் திரிவுபடுத்தி நாம் தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்டதாக எம்மீது வீண்பழி சுமத்திள்ளனர். அவர்களின் இச்சேறு பூசும் செயற்பாட்டினை மக்கள் நன்கு அறிவர் என்று தேசிய காங்கிரஸ் கட்சியின்தலைவரும், புதியஜனநாயக கட்சியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான அதாஉல்லா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு புதன்கிழமை மாலை இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் பள்ளிவாசல்களுக்கு துஆ பிரார்த்தனை புரிவதற்காக சென்றிருந்தோம். அதனை சிலர் உண்மைக்குபுறம்பாகதிரிவுபடுத்திநாம் தேர்தல் விதிமுறைகளை மீறினோம் எனத்தேர்தல்கள்திணைக்களத்திற்கும், பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர்.

எனது அரசியல் செயற்பாடுகளை முடக்குவதற்கும், என்னுடைய வாக்குகளை சிதறடிக்கச் செய்யவுமே மாற்றுக் கட்சியினைச் சேர்ந்த சிலர் இவ்வாறான அவதூறுகளையும் பொய்களையும் புனைந்துள்ளனர். நாம் அரசியல் செயற்பாடுகளை தேர்தல் காலங்களில் மேற்கொள்ள ஆரம்பிக்கின்றபோது புனித பள்ளிவாசல்களுக்குச் சென்று விஷேட துஆப் பிரார்த்தனைகள் புரிவது வழக்கம்.

அதன் அடிப்படையிலேயே நாம் துஆப் பிரார்த்தனை புரிவதற்காக சென்றோம். சிலர் அதனைத் திரிவுபடுத்தி எம் மீது வீணாகச் சேறு பூச முயற்சிக்கிறார்கள். நாம் ஊர்வலத்தினை மேற்கொண்டோம் எனவும்போராட்டங்களைநடத்தினோம் எனவும் பொய்க்குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளனர். உண்மைக்குப் புறம்பான இந்த விடயத்தினைநாம் நீதிமன்றத்தில்தெரிவித்திருக்கின்றோம். எமது பக்க நியாயங்களையும் உண்மைகளையும் நாம் அங்கு தெரியப்படுத்தியிருக்கின்றோம். இவ்விடயத்திலிருந்து இப்போதைக்கு நாம் விடுபட்டிருந்தாலும் அதற்கான வழக்குத் தொடர்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மக்கள் இவ்விடயத்தின் உண்மையினை நன்கு அறிந்து வைத்துள்ளனர். இந்த மாவட்ட மக்களும், அக்கரைப்பற்று பிரதேச பொதுமக்களும் இதற்காக வேண்டி வீணாகக் கலக்கம் அடையவோ சலசலப்புகளுக்கு அஞ்சவோ தேவையில்லை.

குறித்த தினத்தில் நாம் துஆப் பிரார்த்தனையில் ஈடுபடுவதற்காகவே சென்றிருந்தோம். அன்றைய தினம் எம்மிடம் ஓர் துண்டுப் பிரசுரமோ வேறு ஏதும் தேர்தல் பரப்புரை கையேடுகளோ இருக்கவில்லை. பிராத்தனை மேற்கொள் ளச் சென்ற எம்மை போராட்டக்காரர்கள் என்று எம் மீது குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

நாம் பிரார்த்தனை புரியச் சென்ற விடயம் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் நன்கு தெரிந்திருந்தாலும்கூட மாற்றுக் கட்சியினைச்சேர்ந்த சிலரது சதி மூலம் தேர்தல் திணைக்களத்திற்கும் துறைசார் அதிகாரிகளுக்கும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதனை பொதுமக்கள் விளங்கிக்கொண்டுள்ளனர்.

அதாவுல்லாவினை சிறையில் அடைத்து தோற்கடிக்கலாம் என எண்ணுகின்றவர்களும், அதாவுல்லாவினை பிழையாகச் சித்தரித்துக் காட்டி வாக்குகளை தாம் பெற்றுக்கொள்ளலாம் என நினைப்பவர்களும் சேர்ந்து செய்த சதியாகவே இவ்விடயத்தினை நாம் பார்க்கின்றோம். அரசியல் வங்குரோத்துக்காரர்களின் சதிகள் யாவும் எதிர்வரும் தேர்தல் மூலம் நிச்சயமாக முறியடிக்கப்படும்.

இன்றையஆளும்தரப்புமக்களுக்குநன்மையான விடயங்களைச் செய்கின்றபோது நாம் அதற்கு எப்போதும் உதவியாக இருப்போம். தற்போதைய ஜனாதிபதி எமக்கு பரிச்சயமானநல்லதொருநண்பர். நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் நாம் ஒன்றாக செயற்பட்டிருக்கின்றோம்.

இந்த நாட்டினைப் பொறுத்த வரையில் பொருளாதார ரீதியாக எதுவும் நடக்கலாம். ஏனெனில், நாம் கடந்த காலத்தில் பல பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் சந்தித்திருக்கின்றோம். அதனால் நாட்டின் தலைமை மாற்றுச் சிந்தனையினை கொண்டிருக்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அப்போதுதான் பொருளாதாரச் சரிவிலிருந்து எம் நாட்டினை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

நாடாளுமன்றத் தேர்தலை நமது மக்கள் நன்கு புரிந்து கொண்டு தமக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யவேண்டும். இத்தேர்தலில் தமக்கு நம்பிக்கையுள்ள, தமக்கு சேவை செய்யக் கூடியவர்களைத் தெரிவு செய்யவேண்டும். பெரும் கட்சிகள் பல இருந்தாலும் சிறுபான்மை மக்களுக்கு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அவசியம் தேவையாக உள்ளன.

சிறுபான்மைக் கட்சிகளை அழிக்க பெரும்பான்மைக் கட்சிகள் சதி செய்யுமாக இருந்தால் பெரும்பான்மைக் கட்சிகளே அழிந்து போகும். தேசிய காங்கிரஸ் கட்சி மக்களுக்காக பல்வேறான பணிகளை கடந்த காலத்தில் செய்திருக்கிறது. அதற்காக இப்பிராந்திய மக்கள் நம்மையும் நமது கட்சியினையும் ஆதரிக்க வேண்டும் என்றார்.

# புதிய ஜனநாயக முன்னணி 60 ஆசனங்களைப் பெறும்

## திருமலை மாவட்ட வேட்பாளருமான மஹ்ரூப் நம்பிக்கை



(ஹஸ்பர்)

2024 நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முண்ணனி 60க்கும் மேற்பட்ட ஆசனங்களை பெற்று ஆட்சியாளர்கள் அழைக்கக்கூடிய சக்தியாக மாறும் என்று திருகோணமலை மாவட்ட புதிய ஜனநாயக முண்ணனியின் முதன்மை வேட்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியா, பெரியாற்றுமுனை பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய ஜனநாயக முண்ணனி 22 மாவட்டங்களிலும் அனுபவமிக்க தலைவர்களை களமிறக்கியுள்ளது. ரணில் விக்ரமசிங்க தீவிர அரசியலுக்குள்மீண்டும்வரவேண்டும் என இளைஞர்கள் விரும்புகின்றனர். கடந்த இருவருடங்களுக்குள் நாட்டை பொருளாதார ரீதியாக மீட்டெடுத்து எரிபொருள் பிரச்சினை, அந்நியச் செலவாணிபிரச்சினைஎன்பவற்றைத் தீர்த்துக் காட்டியவர் ரணில்.

இதனால் மக்கள் மீண்டும் ரணிலைஎதிர்பார்க்கிறார்கள். அதற்காக ரணில்தரப்பினர்அதிகஆசனங்களைப் பெறக்கூடிய நிலை மக்கள் மத்தியில் உருவாகியிருப்பதை அறிய முடிகிறது. திருமலை மண்ணில் சிலிண்டர் போனஸ் ஆசனத்தை பெறக் கூடிய வாய்ப்பு உள்ளது. அதன் மூலம் நான் நாடாளுமன்ற் செல்வதும் உறுதியாகியுள்ளது.

'சிஸ்டம் சேன்ஜ்' என்று கூறி அநுர குமார 41 சதவீத வாக்குகளைப் பெற்றாலும் மீண்டும் அதனை பெற முடியாத நிலை உருவாகும் என்பதை தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் ஊடாக காண முடிகிறது. எதிர்வரும் காலங்களில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படக்கூடிய வகையில் புதிய ஜனநாயக முன்னணி நேர்மையான தலைமைத்துவத்துடன் ஆட்சி அமைக்கும் - என்றார்

# வேட்பாளர் சசிகலா வீடு மீது அயல் வீட்டுப் பெண் கல்லெறி



ஜனநாயகத்தமிழ்தேசியகூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜின் வீட்டுஜன்னல்கண்ணாடிமீதுகல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அயல் வீட்டிலுள்ளவர்களுடன் சசிகலாவிற்கு இருக்கும் முரண்பாடே இந்தத்தாக்குதலுக்குக்காரணம்என்று பொலிஸார் கூறினர். தனது அயல் வீட்டில் வசிக்கும் பெண் ஒருவரே தனது வீட்டின் மீது கல்லெறிந்தார் என்று சசிகலா ரவிராஜ் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தனது அயல் வீட்டுக்காரி தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர் என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அயல் வீட்டுப் பெண்ணால் தான் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றார் என்றும் சசிகலா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நடாளுமன்றத் தேர்தல் 2024

புதிய அரசமைப்பு முயற்சியைத் தொடர

# தமிழ் அரசுக் கட்சியும் தமுகூட்டணியும் நாடாளுமன்றம் செல்வது காலக் கட்டயாம்

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



பத்தாவது நாடாளுமன்றத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படும் புதிய அரசமைப்பு உருவாக்க கலந்துரையாடலில் பங்கேற்று, நமது மக்களின்நியாயமானஅபிலாசைகளை புதிய அரசியலமைப்பில் இடம் பெறச் செய்யவேண்டும். இந்நோக்கில், தென்னிலங்கையில்தமிழ்முற்போக்கு கூட்டணியும், வடகிழக்கில் இலங்கை தமிழரசு கட்சியும் வெற்றி பெற்று அரசியல்பலத்துடன்நாடாளுமன்றத்தில் இடம்பெறுவது காலத்தின் கட்டாயம். இதைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணிதலைவர்மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமுகூ தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதிஅனுரகுமாரதிசாநாயக்க, இந்நாட்டின் தேசிய இன பிரச்சினை என்ற தீரா சவாலுக்கு தீர்வாக முன் வைத்துள்ள ஒரே யோசனை புதிய அரசமைப்புக்கான நல்லாட்சி அரசமைப்பு முயற்சிதத் தொடர்வது என்பதாகும்.

ஜனாதிபதி அனுரகுமாரவின் இந்த யோசனையை நாம் வரவேற்கிறோம். அனுர ஆட்சிக்கு வந்த இந்த ஒரே மாதத்திற்கு உள்ளேயே நாட்டின் அனைத்து சவால்களுக்கும் பதில் தரவேண்டும் என்றகுறுகியஅரசியலையும்நாம்செய்யவில்லை. புதிய அரசுக்கு நியாயமான அவகாசம் கொடுக்கப்படவேண்டும் என நாம் எண்ணுகிறோம்.

அதேவேளையில் புதிய நாடாளுமன்றத்தில், இந்த உத்தேச புதிய அரசமைப்பை உருவாக்கும் சர்வகட்சி கலந்துரையாடலின்போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு வெற்றுக் காசோலை தரவும் நாம் தயார் இல்லை.

நல்லாட்சியின்போது (2015 --2018) நடந்த நல்ல பல விடயங்களில் ஒன்று, நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சமபல (Balanced) தீர்வுகளைத் தேடும் புதிய அரசமைப்பு ஒன்றை கலந்துரையாடி உருவாக்கும் பணியாகும். அது ஒரு சர்வ கட்சிப் பணி.

2015ஆம் ஆண்டு, சபாநாயகர் நாடாளுமன்றத்தில் பெயர் குறிப்பிட்டு நியமித்த வழிகாட்டல் குழு (Steering Committee), புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கில், கலந்துரையாடி, வாத விவாதம் செய்து, குறைந்தபட்ச பொது உடன்பாடுகளில் கருத்தொற்றுமை கண்டு முன்னெடுத்தது. இடைக்கால அறிக்கையையும் சமர்பித்தது. இன்னும் பல துறைசார் உபகுழுக்ளையும் தனக்கு உதவியாக நியமித்தது.

அந்த வழிகாட்டல் குழுவில் இலங்கையின் தேசிய இனங்களையும், அரசியல் சித்தாந்தங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் சர்வ கட்சி பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

வழிகாட்டல் குழுவுக்கு அன்றைய பிரதமர் ரணில் தலைமை தாங்கினார். ஜேவிபி சார்பில் இன்றைய ஜனாதிபதி அனுர, தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் மனோ கணேசனாகிய நான், தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் மறைந்த இரா. சம்பந்தன், சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவுப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ரிசாத் பதுர்தீன் மற்றும் தினேஷ் குணவர்த்தன, பிரசன்ன ரணதுங்க, சம்பிக்க ரணவக்க, டிலான் பெரேரா, ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் உட்பட இன்னும் பலர் இக்குழுவில் இடம் பெற்றனர்.

சிங்கள, ஈழத்தமிழ், முஸ்லிம், மலையக இலங்கை மக்கள் சார்பாக விரிவான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கபட்டு, கலந்துரையாடி மிகச் சிறப்பாக நடந்த இந்தப் பணியை, அதன் இடைகால அறிக்கை வந்ததும், திட்டமிட்டு அரசியல் நோக்கில், மகிந்த ராஜபக்ச தலைமையியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை குழப்பியது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை சார்பில் அன்று வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றவர்கள், கடந்த மாதம் வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலே பிரதமராக இருந்த தினேஷ் குணவர்தன மற்றும் பிரபல அமைச்சராக இருந்த பிரசன்ன ரணதுங்க ஆகியோராவர்.

வழிகாட்டல் குழுவின் செயற்பாட்டைக் குழப்ப, இந்த இனவாத பொது ஜன பெரமுனை கும்பல் பயன்படுத்திய கோஷம் 'பிரபாகரன் ஆயுத பலத்தால், பெற முடியாததை, சம்பந்தன் பேச்சு மூலம் பெற முயல்கிறார்' என்பதாகும். இந்த கும்பலுக்கு அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால, இரகசிய ஆதரவு வழங்கி, 52 நாள் திருட்டு ஆளும்தரப்பில் மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்தது வரை அந்த அலங்கோல வரலாறு தொடர்ந்தது. அத்துடன் அந்த புதிய அரசியலமைப்பை எழுதும் 'வழிகாட்டல் குழு' (Steering Committee), செயன்முறை இடை நின்றது.

இன்று, இனவாதிகள் அரசியல் பரப்பில் கணிசமாக இல்லை. ஆகவே, நாம் அனைவரும் அன்று ஆரம்பித்த, புதிய அரசமைப்பை எழுதும் சர்வ கட்சி பணியை தொடரப் போவதாக ஜனாதிபதி அனுர திசாநாயக்க அறிவித்துள்ளதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

மாறிவரும் இன்றைய அரசியல் சூழலில், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகும், அரசியல் யாப்பை உருவாக்கும் உரையாடலில் ஆளுமையும், அனுபவமும் உள்ள சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள் பங்கு பெற வேண்டுமா? இல்லையா? என்பதை தமிழ் வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டும்.

இந்த நோக்கில், கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரேலியா, பதுளை மாவட்டங்களில் போட்டியிடும் தமிழ் முற்போக்கு கூட்டணியும், யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் வெற்றி பெற்று அரசியல் பலத்துடன் பாராளுமன்றத்தில் இடம் பெறுவது காலத்தின் கட்டாயம். இதை தமிழ் மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும் – என்றார்.

# கொழும்பில் டக்ளஸுக்கு நேற்று பெரும் வரவேற்பு



முன்னாள் அமைச்சரும் ஈபிடிபி கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேட்ப்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்று கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இடம்பெற்றது.

ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் ஆலய பிரதம குரு சுப்ரமணிய குருக்களின் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றன. அதைத் தொர்ந்து சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, தமிழ்நாடு நவக்களனிபுர சிவா குருக்கள், அம்பிகா ஜோதிடம் சிவனேசன் சர்மா, கொழும்பு கொச்சிக் கடை பொன்னம்பலாகேஸ்வர உதவி குரு ஈசன் சர்மா மற்றும் தர்சக சர்மா, யாழ் ரகுபதி சர்மா ஆகியோர் ஆசி உரைகளை வழங்கினர்.

ஆலய அறங்காவலர் சபையினால் அமைச்சர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதன் பின்னர் ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் இருந்து விவேகானந்தா சபை வரை மேளதாளங் களுடன் அவர் அழைத்துச்செல் லப்பட்டார்.

விவேகானந்தா சபையில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. கிராண்ட்பாஸ்விஜிதகேரத், இலங்கை நாடு பல்லின மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான ஒரு முன்னுதாரணம், அதனாலேயே இம்முறை ஈபிடிபி கொழும்பு மாநகரில் போட்டியிடுகின்றது. இலங்கைவாழ் மக்கள் ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும் என்ற கருத்தினை அங்கு வலியுறுத்தினார்.

கொழும்பு நரில் தங்களது வாழ்வு சுபீட்சம் அடைய நல்லதொரு மாற்றத்தை டக்ளஸ் ஏற்படுத் தித் தருவார் என பாபுசர்மா தனது உரையில் உறுதிப்படுத்தினார்.

மேலும் நாங்கள் எப்போதும் மக்களுக்கான சேவையில் இருக்கிறோம், மக்களுடைய தேவைகளை அறிந்து அந்தந்த நேரங்களில் செய்யக் கூடிய காரியங்களைக் கடினமான காலங்களில் இருந்து செய்து வருகின்றோம். தொடர்ந்தும் மக்களுக்காகச் செயற்படுவோம் பயணிப்போம் என டக்ளஸ் தேவானந்தா தனது உரையில் தெரிவித்தார்.

தமிழ்நாடு களனிபுர அறநெறி பாடசாலை தலைமை ஆசிரியர் கோசலா சிவனேசன் சர்மா, அறநெறிப்பாடசாலைஆசிரியர்களுக்கானவருடாந்தக் கொடுப்பனவை அதிகரிக்கவேண்டும் எனவும் ஐயப்ப சங்க ஒன்றிணைப்பாளர் பிச்சைகிருஷ்னா, கொழும்பிற்கும் தூத்துகுடிக்கும் இடையிலான கப்பல் சேவையினை தொடங்குவதற்கான கோரிக்கைக் கடிதத்தினையும் மேடையில் வைத்து கையளித்திருந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# நடாளுமன்றத் தேர்தல் 2024



# கல்முனையை துண்டாட முயலும் எந்தச் சக்திக்கும் இடம் கிடையாது

## தமிழ் அரசு வேட்பாளர் நிதாசன் திட்டவட்டம்



(பாறுக் ஷிஹான்)

கல்முனையை துண்டாட நினைத்துதமிழ்மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்க முயற்சிக்கின்ற எந்தவொரு அரசியல் சக்திக்கும் எமது கட்சி தலைமையும் எமது கட்சி உறுப்பினர்களும் இடமளிக்க மாட்டார்கள் என அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தலில் தொகுதியில் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளருமான அருள்ஞானமூர்த்தி நிதான்சன் தெரிவித்தார்.

அம்பாறையில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் காலங்களில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முன் வைத்து அரசியல் செய்பவர்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றது. காரணம்யாதெனில்கல்முனைவடக்கு பிரதேசசெயலகம் தொடர்பாக வழக்கு ஒன்று நிலுவையில் இருக்கின்றது. இதனை எந்தவொரு சக்தியினாலும் முறியடிக்க முடியாது. இந்த வழக்கில் நாங்கள் வெற்றி பெறும் கட்டத்தில் இருக்கின்றோம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் என்பவரது கூட்டம் ஒன்றில் தமிழ் மக்களுக்கு எதிரான தீவிரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக்கருத் துக்கள்யாவும்ஆக்ரோஷமானதாகவும் தமிழ்,முஸ்லீம்மக்களின்இனவாதத்தை தூண்டுவதாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற வேளை, நேரலைகள் வலுக்கட்டாயமாக நிறுத்தப்பட்டதோடுஊடகவியலாளர்கள் சுதந்திரமாகசெய்திகளைசேகரிப்பதற்கும் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். இதனால் அன்றுஅவரால்பேசப்பட்டவிடயங்கள் வெளி உலகத்திற்கு வரவில்லை. ஆனால்நாம்அங்கிருந்துதகவல்களைப் பெற்றுள்ளோம்.

அந்த வகையில் தமிழ் மக்களைப் பயங்கரவாதிகளாகவும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை பயங்கரவாதிகள் கொண்டு வந்த பிரதேச செயலகமாகவும் கூறி, சந்தர்ப்பவாத அரசியல் செய்ய ஹரிஸ் முயற்சி செய்கின்றார். முஸ்லீம் மக்களை உணர்வு ரீதியாக தூண்டி விட வேண்டும் என்பதற்காக பல இனவாத கருத்துக்களைக் விதைத்துள்ளார்.

அவர் இன்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸில் இருந்து விலகியது போன்று நாடகம் ஆடிக்கொண்டு இருக்கின்றார். கடந்த காலங்களில் தனது தலையை ரணிலுக்கு காட்டிவிட்டுவாலைசஜீத்திற்கு காட்டியவர். இன்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கு ஹரீஸின் ஆதரவாளர்களை வேலை செய்ய வைத்துக்கொண்டு அவர்களுக்கான ஆதரவினை வழங்கி அவர்களது மேலங்கிகளை அணிந்து அவர்களின் பின்னால் நிற்க முயற்சிக்கிறார்.

ஹரிஸ்மட்டுமன்றிஅவரைவிடஇனவாதிகளான சக்திகளும்இன்றுகல்முனையில்உருவாகிக்கொண்டு இருக்கின்றன. கல்முனை பகுதியில் உள்ள ஒரு பொது நூலகத்திற்கு முன்னாள் அமைச்சர் மன்சூரின் பெயரைச் சூட்டுவதற்கு முயற்சி எடுத்த தரப்புக்கள் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றன..மன்சூரின் மகன் ரஹ்மத் மன்சூர் இன்று தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார். அவர் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்து கல்முனை மாநகர சபையின் ஒரு பிரதி மேயராக இருந்திருக்கின்றார்.

ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஹரீஸ் இல்லாவிட்டாலும் அவருக்குப் பதிலாக ரஹ்மத் நிறுத்தப்பட்டுள்ளார். ரஹ்மத் கல்முனை நாடாளுமன்ற உறுப்பினராக வந்தாரானால் எவ்வாறான ஆபத்துக்கள் எமக்கு வரும் என்பது நன்குத் தெரியும். கல்முனையைத துண்டாட நினைத்து தமிழ் மக்களின் இருப்பை இங்கு கேள்விக்குறியாக்க முயற்சிக்கின்ற எந்தவொரு அரசியல்சக்திக்கும்எமதுகட்சிதலைமையும்எமதுகட்சி உறுப்பினர்களும் இடமளிக்கமாட் டார்கள்.

நான் இந்த இடத்தில் நாடாளுன்ற உறுப்பினராகவோ அல்லது கட்சியின் சாதாரண உறுப்பினராகவோ இருந்தாலும் கூட இவ்வாறான இனவாத நடவடிக்கைக்கு இடங்கொடுக்க மாட்டேன். அது மாத்திரமன்றி சிறு சிறு குழுக்களின் கலந்துரையாடல்களில் தமிழ் மக்களுக்கு எதிரான தீவிர பரப்புரைகளில் முஸ்லிம்களால் பாசிசவாதம் என்ற சொல் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றது. இதுதவிர்க்கப்படவேண்டும்.

கரையோர மாவட்டம் என்பது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக இருப்பினும் கல்முனை தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படும் வகையில், கல்முனை தொடக்கம் பொத்துவில் வரையான தமிழ் கிராமங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்ற வகையில் கரையோர மாவட்டத்தைப் பிரிப்பதற்கு எந்தவொரு இடத்திலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அதனை முன்னிறுத்தி கல்முனை பகுதியில் தேர்தலில் இறங்கி இருக்கின்ற வேட்பாளர்களுக்கு எதிராக நான் களத்தில் எப்போதும் இருப்பேன் - என்றார்.

# தமிழ் மக்கள் கூட்டணியினர் நேற்று யாழ். நகரில் பரப்புரை



தமிழ் மக்கள் கூட்டணியினர் நேற்று யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் கடைகளிலும் பேருந்து நிலையம் உள்ளிட்ட பொது இடங்களிலும் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டனர்.

வேட்பாளர்களான மணிவண்ணன், பார்த்தீபன், மிதிலைச் செல்வி ஆகியோர் நகரில் உள்ள கடைப் பணியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் தேர்தல் துண்டறிக்கைகளை வழங்கி அவர்களிடம் ஆதரவு கேட்டனர். கட்சி ஆதரவாளர்கள் பலரும் அவர்களுடனிருந்தனர்.

# திருமலையில் தேசிய மக்கள் சக்தி இம் முறை அமோக வெற்றி பெறும்

## அக்கட்சி வேட்பாளர் ராபிக் தெரிவிப்பு



(ஹஸ்பர்)

2024நாடாளுமன்றத்தேர்தலில்திருகோணமலை மாவட்டத்தில்தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியை காணும் என கட்சியின் அந்த மாவட்ட வேட்பாளர் முஹம்மது ராபிக் தெரிவித்தார்.

திருகோணமலை வெள்ளைமணல் பகுதியில் நேற்றுஇடம்பெற்றமீனவர்களுடனானகலந்துரையாடலின் பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப் பகுதி மக்கள் காணிப் பிரச்சினை, கடல் தொழில் பிரச்சினை எனப் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதற்காக காணிக்கான தனியான ஆணைக்குழு அமைத்து தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் தீர்வு வழங்கப்படும். மக்கள் தேசிய மக்கள் சக்தியை நம்பி ஜனாதிபதிக்கான ஆணையை வழங்கியுள்ளார்கள். அதுபோன்று இம் முறை நாடாடளுமன்றத்திலும் ஆட்சி அமைக்கக் கூடிய பலத்தை மக்கள் நிச்சயமாக எமது கட்சக்கு வழங்குவார்கள்.

அரசியலில்ஜாம்பவான்கள் எனக் கூறிய பலர், 96 முன்னால்நாடாளுமன்றஉறுப்பினர்கள்அமைச்சர்கள் இந்தத் தேர்தல் போட்டியிடாது விலகியுள்ளார்கள். இவர்கள் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அரசியல் வியாபாரம் செய்யவோ திருடவோ முடியாது என்ற எண்ணத்தினாலேயே விலகியுள்ளார்கள். இது புதிய நாடாளுமன்றத்தின் பலத்தை எமக்கு காட்ட உதவும். கடந்த காலத்தில் ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் - என்றார்.




# தேமசவின் உண்மை முகம் வெளிப்பட்டதால் தமிழ் மக்களிடம் செல்வாக்கு இழந்துவிட்டனர்

## சந்திரகுமார் தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியினர் தமது உண்மை முகங்களை தற்போது வெளிப்பட்டுவிட்டதால் தமிழ் மக்கள் மத்தியில்செல்வாக்கைஇழந்துவிட்டனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளராகப்போட்டியிடும்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஏராளமான சுயேச்சை குழுக்கள் களமிறங்கி வாக்குகளை சிதைக்க முயற்சிக்கின்றன. அந்தக் குழுக்களில் போட்டியிடுபவர்கள் யார் என்பது பற்றி மக்கள் மத்தியில் தெளிவு இருக்கிறது.

ஐக்கிய மக்கள் சக்தியில் நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம். ஐக்கிய மக்கள் சக்தியில் மாத்திரமே தான் சிறுபான்மையினர் போட்டியிடுகின்றனர். ஐக்கிய மக்கள் சக்திகட்சிமாத்திரமேசிறுபான்மையினர் மீது அக்கறை உள்ளவர்கள். கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச இனவாதி அல்லர். அவரே சிறுபான்மையினர் மீது அக்கறைகொண்டவர்.

தேசிய மக்கள் சக்தியினரின் உண்மை முகம் தற்போது வெளிவர தொடங்கிவிட்டது. அவர்களே எல்லாம் என்ற மாயையால் அலை ஒன்று ஏற்பட்டிருந்தது. தற்போது உண்மை முகம் வெளிவரத் தொடங்கியதும் அந்த மாயை கலைந்துவிட்டது. ரில்வின் சில்வாவின் கருத்து, ஜேவிபி யார் என்பதனையும் அவர்களின் உண்மை முகத்தையும் எடுத்துக்காட்டிவிட்டது.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு ஒழுங்கான தீர்வுத் திட்டம் எதுவும் அவர்களிடம் இல்லை. தமிழ் மக்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினைதான் இருக்கிறது என கூறுகின்றனர். தமிழர்களுக்கு சோற்றுக்கு தான் பிரச்சினை என சொல்கின்றனர்.

தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் செல்வாக்கை இழந்துவிட்டார்கள். சஜித் பிரேமதாச தலைமையில் தான் நாடாளுமன்றம் அமையும். அவரே பிரதமராகப் பதவியேற்பார். ஊழலற்ற நேர்மையானவர்களே நாடு முழுவதும் சஜித் தலைமையில் போட்டியிடுகின்றனர் – என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளரும் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான உமாச்சந்திர பிரகாஷ் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் கூட்டணியாக நாங்கள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறோம். தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சி பீடம் ஏறி எதனையும் செய்யவில்லை. குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் என எவருக்கும் எதுவும் செய்யவில்லை. அவர்கள் இனியும் செய்யப்போவதில்லை. எனவேதான் சஜித் பிரேமதாச தலைமையிலான ஆட்சிக்கு ஆதரவு வழங்கவேண்டும். யார் மக்கள் பிரதிநிதியாகப் போக வேண்டும் என்பதனை மக்கள்தான் தெரிவு செய்யவேண்டும் – என்றார்.

# தமிழ் பிரதிநிதித்துவம் தமிழ் கட்சியிலிருந்து வந்தால்தான் இருப்பை பாதுகாக்க முடியும்

## திருமலை தமிழ் அரசு வேட்பாளர் குகதான் கருத்து

(ஹஸ்பர்)

தமிழ்க் கட்சியில் இருந்து தமிழ் பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்தால்தான் தமிழ் மக்களின்இருப்பையும்உரிமைகளையும்பாதுகாக்க முடியும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை, திரியாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில் தமிழ் கட்சி சார்பில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தால் தான் மக்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பேச முடியும். ஜே.வி.பியில் அந்தப் பிரதிநிதி தெரிவாகினால் அது நடக்காது. இதனைக் கவனத்திற்கொண்டு தமிழர் பிரதிநித்துவத்தை தமிழ் கட்சியிலிருந்து வருமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

திரியாய்பகுதியில்பலபிரச்சினைகள்உள்ளன. குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் பௌத்த விகாரைகளை அமைக்க மக்கள் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தியுள்ளனர். இதுபோன்று தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், துறைமுக அதிகார சபை எனப் பலவும் மக்களின் விவசாயக் காணிகளை அபகரித்து எல்லையிட்டுள்ளன. இதனை மீட்க தமிழ் பிரதிநிதித்துவம் இந்த மாவட்டத்துக்கும் மண்ணுக்கும்கட்டாயமாகத்தேவை. இதனால்தான் உங்களிடம் இங்கு வருகை தந்துள்ளோம்.

தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் திருகோணமலையில் மிகக் குறைவாகக் காணப்படுகிறது. எனவே இம் முறை ஆர்வத்துடன் வாக்களித்து தமிழ் பிரதிநிதித்துவம் தமிழ் கட்சியில் இருந்து தெரிவாக தமிழர்கள் ஒத்துழைக்க வேண்டும்கு என்றார்.

# முன்னாள் எம்.பி. முஷாரப்புக்கு பொத்துவில் எங்கும் கடும் எதிர்ப்பு



(அபு அலா)

இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரபுக்கு பொத்துவில் பிரதேசமெங்கும் பெரும் எதிர்ப்பலை எழும்பியுள்ளது.

இதன் அண்மைய வெளிப்பாடாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், நாடாளுமன்ற தேர்தல் பரப்புரைக்காகச் சென்றபோது அப்பிரதேச பொதுமக்களினால் புதன்கிழமை விரட்டியடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொத்துவிலின் பல இடங்களிலும் இவ்வாறான எதிர்ப்புக் காட்டப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மதுபானசாலைக்கு அனுமதிப் பத்திரத்தைப் பெற்று விற்றுப் பணம் பார்த்தமை, பொத்துவில் பெரிய பள்ளிவாயலில் பொய் சத்தியம் செய்தமை, குழந்தை எரிப்புக்கு ஆதரவு கொடுத்தமை, முக்கியமான விடயங்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்காமல் ஏமாற்றியமை போன்ற பல குற்றச்சாட்டுக்களை பொத்துவில் மக்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மீது சுமத்துகின்றனர்.

அவரது செயல்களை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவிக்கும் பிரதேச மக்கள், அதனாலேயே அவர் செல்லும் இடங்களில் அவருக்கு எதிர்ப்புக்காட்டப்படுகின்றது என்கின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கரிசனைக்குரிய திட்டம்

**போர்ப் பதற்றத்திற்கும் மத்தியில் இலங்கையில் இருந்து தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்வதில் ஆளும்தரப்பு தொடர்ந்து அக்கறை காட்டுவது கரிசனையை எழுப்பியுள்ளது. இலங்கை அரசுக்கும் இஸ்ரேல் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி 203 மார்கழி மாதம் முதல் 2 ஆயிரத்து 447 இலங்கையர்கள் இஸ்ரேலில் விவசாய வேலைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.**

**இதேவேளை, விவசாய கைத்தொழில் துறையில் வேலைகளுக்குதகுதிபெற்றமேலும் 61 இலங்கையர்களுக்கு விமான டிக்கெட் வழங்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அண்மையில் நடைபெற்றதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.**

**இந்த சூழலில் இஸ்ரேலிய விவசாய தொழில்துறை தொழிலாளர்கள் 53 பேரை உள்ளடக்கியது. அவர்களில் 13 பேர் ஐப்பசி 30 இஸ்ரேலுக்கு புறப்படுவார்கள், மீதமுள்ளவர்கள் கார்த்திகை 6 மற்றும் 16 ஆகிய தினங்களில் புறப்படுவார்கள். தன்னைச் சுற்றியுள்ள பலஸ்தீனம், லெபனான், ஈரான் என்று முஸ்லிம் நாடுகளுடன் இஸ்ரேல் போர் நடத்தி வரும் நிலையிலும், மத்திய கிழக்கு போர்ப் பதற்றத்துக்குளாக்கி இருக்கும் நிலையிலும் இலங்கையர்கள் தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது பெரும் கரிசனைக்குரியது.**

**ஈரான் ஆள்களற்ற வானூர்திகள் மற்றும் ஏவுகணைகள் மூலம் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக நேற்று இஸ்ரேல் நூற்றுக்கும் மேற்பட்ட போர் வானூர்திகளை ஈரானுக்கு அனுப்பித் தாக்குதல் நடத்தியிருப்பது அங்கு போர்ப் பதற்றத்தை இன்னும் அதிகரித்திருக்கின்றது. தனது பதிலடி என்று இஸ்ரேல் அறிவித்திருக்கும் இந்த நடவடிக்கை இரு நாடுகளுக்கும் இடையில் முழு அளவிலான போர் ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

**போர்மற்றும்தாக்குதல்அச்சம்காரணமாகஇஸ்ரேலுக்குள் தமதுபயணங்களைமட்டுப்படுத்திக்கொள்ளுமாறுஅங்குள்ள இலங்கைத் தூதுவர் அறிவித்துள்ளார்.**

**இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்களுக்கு பயணத்தை குறைக்குமாறும் பணியிடங்களில் மிகவும் அவதானமாக இருக்குமாறும் தூதுவர் நிமல் பண்டார அறிவுறுத்தியுள்ளார். அங்கு எதிர்காலத்தில் 'ட்ரோன்' மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்த அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.**

**இதேவேளை, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள மோதல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அங்கு தங்கியுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சும் தெரிவித்துள்ளது.**

**மத்தியகிழக்குபிராந்தியத்தில்தங்கியுள்ளஇலங்கையர்கள் தொடர்பில் தூதரகங்கள் ஊடாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தாக்குதல்களால் இலங்கையர் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.**

**போர்ப் பதற்றம் காரணமாக இலங்கைக்குத் திரும்ப விரும்பும் மக்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்குமாறுதூதரகங்களுக்குஅறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மோதல்கள் காரணமாக இதுவரையில் எந்தவொரு இலங்கையர்களும் நாடு திரும்புவதற்கு கோரவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.**

**இத்தகைய நிலையும்கூட இலங்கையிலிருந்து புதியவர்களை இஸ்ரேலுக்கு அனுப்பும் திட்டம் கரிசனைக்குரியது. அது குறித்து புதிய ஆட்சியாளர்கள் தீவிரமாகப் பரிசீலிக்கவேண்டும்.**

# வாக்காளர்கள் சிந்திக்கவேண்டிய நேரமிது.

**ந.சதாசிவ ஐயர்**

வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளவர்கள் சிந்திக்கவேண்டிய நேரம் ஒக்டோபர் 11 வேட்பு மனுதாக்கல் செய்த இறுதிநாளுடன் முடிந்து விட்டது.

தமிழ்மக்களுக்காகஏதோசெய்யப்போகிறார்கள் என்று கூறிக்கொண்டு நாடாளுமன்றக் கதிரைகளுக்காக நூற்றுக்கணக்கில் களமிறங்கிவிட்டார்கள். கட்சி, மக்கள், கொள்கை எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டுவிட்-டு முற்றுமுழுதான சுயநல நோக்கோடு பதவி ஆசையில் எமக்காக ஏதொ வெட்டி விழுத்தப்போகிறார்கள் என்று கோமாளிக் கூத்து ஆடத்தொடங்கிவிட்டார்கள்.

விகிதாசாரத் தேர்தல் முறையினைப் பற்றி போதிய தெளிவில்லாத மக்கள் கண்ணை மூடிக்கொண்டு அண்ணன், தம்பி, மாமன், மச்சான், அயலவன், ஊரவன் எனவும் இவனுக்கு போட்டுப் பாப்பம் அவனுக்கு போட்டுப் பாப்பம் எனவும் தகுதி அறியாமல் யதார்த்தம் அறியாமல் இப்படி பல விதத்தில் வாக்களிப்பர். வாக்களிப்பு முடிந்து வாக்கு எண்ணும்பொழுது கூட்டிக் கழித்து பெருக்கி பிரித்து பார்த்தால் நூறு வாக்கு வித்தியாசத்தில் சிலநேரம் பத்து வாக்கு வித்தியாசத்தில்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக யார் யாரோ எவரெவரோ தெரிவாவர். விகிதாசார தேர்தல் பற்றி மக்கள் தெளிவுபடுத்தப்படாவிட்டால் இதுதான் நடக்கப்போகிறது.

தேர்தல் பரப்புரை ஒருபுறமிருக்க சமூகச் செயற்பாட்டாளர்கள் என்று சொல்லிக்கொள்கின்ற அமைப்புக்கள் மக்களில் அக்கறையுள்ள கிராமிய அமைப்புக்கள் இதுபற்றிய நடுநிலையான விழிப்புணர்வுகளை பக்கச்சார்பின்றி எடுத்துரைத்தல் காலத்தின் தேவையாகும். அளிக்கப்படும் ஒவ்வொருவாக்கும்; செல்லுபடியானதாக அமையவேண்டும் வாக்களிக்கும் மக்கள் பொறுமையாக நிதானமாக வாக்குச்சீட்டைப் பரிசீலித்து வாக்களிப்பது எப்படி எனநடுநிலையாகநின்றுதெளிவுபடுத்தவேண்டும்.

சரியான முறையில் புள்ளடி இடப்படாததால் செல்லுபடியற்றதான வாக்குகள் எப்படி கணக்கெடுப்பிலிருந்து ஒதுக்கப்படுகின்றதோ அதேபோல் ஐந்து வீதத்துக்கு குறைவாகப் பெறும் கட்சிகளினதும் சுயேசடசைக் குழுக்களினதும் வாக்குகளும் ஒதுக்கப்படும். ஆதலால் மாவட்ட மட்டத்தில் ஐந்து வீதத்துக்குக் குறைவாகப் பெறப்பட்ட வாக்குகளும் ஒருவிதத்தில் பார்த்தால் செல்லுடியற்றவையே. பல மாவட்டங்களில் போட்டியிடுகின்ற கட்சிகளுக்கு மட்டும் அது அதிர்ஸ்டவசமாக தேசியப் பட்டியலுக்கு உதவக்கூடும்.

இன்று தமிழ் மக்களாகிய நாம், எமது நிலம், எமது மொழி, எமது வளம், எமது உரிமை என்பதைநிலைநிறுத்தப்பாடுபடும்அதேநேரத்தில் அதற்குப் பலம் சேர்க்கும் விதத்தில் வடக்கு கிழக்கிற்கு வெளியே பலவித காரணங்களால் நிரந்தரமாகவும்தற்காலிகமாகவும்வாழும்தமிழ் மக்கள் அதற்கு வெளியேயும் நாடுபெயர்ந்தும் வாழ்கின்ற தமிழர்கள் மற்றும் தமிழ்ப்பேசும் மக்களாக இலங்கை முழுவதும் பரந்து வாழுகின்றவர்கள் என எல்லோரின் நலனிலும் அக்கறை உடையவர்களாக இருத்தலும் தற்போதையநிலையில்தவிர்க்க முடியாததாகும்.

எம்மோடு பேசுகின்ற அயல்நாடுகள் மற்றும் சர்வதேசங்கள் நாங்கள் ஒற்றுமையாக ஒரே அணியில் நிற்கவேண்டும் என அடிக்கடி இடித்துரைப்பதில் நியாயமில்லாமல் இல்லை. போரிட்டபோதும் ஒன்றிணைய முடியாமல் ஒன்றேயானதாலேயே போராட்டத்தை முன்னெடுக்க முடிந்தது. அந்த ஒன்றேயானமை கலைந்தமையே தோல்விக்கும் காரணமானது என்பது யாவருமறிந்த உண்மை.

அதேபோல் அண்மையில் அரசியலிலும் சமூக நல்லுள்ளங்களுடனும் சேர்ந்து ஒற்றுமையாக ஒரே அணியில் நிற்கிறோமென கங்கணம் கட்டிநின்றவர்கள் அறிக்கை தயாரிப்பதிலிருந்து ஒப்பமிடுவதுவரை பிச்சல் பிடுங்கலுடன் அல்லலுற்றார்கள். இப்போது சமூகச் செயற்பாட்டாளர்களை கைவிட்டுவிட்டு எச்சில் இலைக்காக பாய்தோடி பிச்சுப்பிடுங்கும்நிலைக்காளானார்கள். ஆதலால் எவருக்கும் விகிதாசார தேர்தல் முறையில் முழு ஆசனங்களையும் அல்லது பெருமளவிலான ஆசனங்களை பெறும் சாத்தியமில்லை.

ஒற்றுமைஒரேஅணிஎன்பதும்சாத்தியமில்லை என்பதை அனுபவபூர்வமாகவும் அறிந்தாயிற்று. அதேநேரத்தில் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு நேரடியாக ஆதரவளித்து வாக்களிப்பது என்பது எமது தனித்துவத்தை நாமே குழிதோண்டிப் புதைப்பதாக அமையும் என்பதையும் யாவரும் கவனத்தில் கொள்வது நல்லது.

ஆதலால் இதோ நாங்கள் இத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரேகட்சியில் பெரும்பான்மையாக மக்கள் குரலாக நிற்கிறோம், நாங்களே தமிழ் பிரதிநிதிகள், கேளுங்கள் நாங்கள் சொல்வதை என அடித்துக்கூறும் ஒரு கட்சியை அரசமைக்கும் கட்சியோடு தேவைக்கேற்ப சேர்ந்தும் சார்ந்தும் எதிர்த்தும் சமநிலையில் நிற்கக்கூடியவர்களையும் கொண்ட ஒரு கட்சியை ஏனைய தென்னிலங்கைத் தமிழ் தலைமைகளோடு புரிந்துணர்வோடுசெயற்படக்கூடியஒருகட்சியை முன்னிலைப்படுத்தவேண்டியதுதமிழர்களாகிய நமது கடமையல்லவா?

தற்போது உருவாகிவரும் இலங்கையின் அரசியல் சூழலில் வடக்கு கிழக்கில் வசிக்கும் தமிழர்கள் மட்டுமல்ல வடக்கு கிழக்கை பூர்வீகமாகக் கொண்ட வடக்குக் கிழக்குக்கு வெளியே நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் வாழும் தமிழர்களும் மத்திய மற்றும் மேற்கிலங்கையை நிரந்தர வதிவிடமாக கொண்ட கணிசமான தமிழர்களும் மலையகத் தமிழர்களும்தமிழைதாய்மொழியாகக்கொண்ட முஸ்லிம் மக்களுமாக இலங்கை தமிழ்ப் பேசும் மக்களாக ஒவ்வொர்ருவரும் தமது தனித்தன்மைகளை பேணுவதோடு ஒருவருக்கொருவர் குரல்கொடுப்பவர்களாகவும் சேர்ந்துநிற்பவர்களாகவும்வாழவேண்டும். அதற்கு ஆதாரமாய் அமையப்போகிறவர்கள் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலிலே நம்மால் நிதானமாக சிந்தித்து தேர்வு செய்யப்படப்போகிறவர்களே.

கடந்தகாலங்களிலும்எமக்காக குரல்கொடுத்த அந்த தலைவர்களையும் அவர்களுக்காக குரல்கொடுத்த எமது தலைவர்களையும் நாமறிவோம். எதிர்காலத்திலும் அப்படி ஒத்திசைவாகப் பலம் சேர்க்கின்ற, ஒற்றுமையாக செயல்படுகின்றதலைமைகளேஎமக்குவேண்டும்.

விகிதாசார தேர்தல்முறையில் இவர் நல்லவர் அவர் நல்லவர் என தனித்தனியா தேரந்தெடுக்கவும் முடியாது .அப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவர்களால் ஒற்றையாக நின்று அரசின் அடிவருடிகளாகி அமைச்சப் பதவி பெற்றாலொழிய ஒன்றையும் சாதிக்கவும் முடியாது. ஆதலால் வடக்கு கிழக்கில் வெட்டி வீழ்த்துவோம்எனவீரவசனம்பேசுபவர்களையும் வைத்தால் குடுமி அடித்தால் மொட்டை எனும் கட்சிகளையும். இவர் வென்றால் எப்படியும் அமைச்சராவார் அவருக்கு பின்னால் திரியலாம் (இம்முறை அப்பயறு வேகாது) என்பதையும். சொந்த பந்தங்களையும் மறந்து நிதானமாக சிந்தித்து பலவகையிலும் பொருத்தமான ஒரு கட்சியைவடக்குகிழக்கில்நிலைநிறுத்துவோமாக இருந்தால்தமிழர்எதிர்வரும்புதிய அரசில்ஓரளவு நிம்மதியாக வாழலாம் என்பதே நிதர்சமான உண்மை.

தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதனை நிதானமாகசிந்தித்துபொருத்தமானஒருகட்சியை பொருத்தமானவர்களோடு நாடாளுமன்றம் அனுப்புதல்இன்றையகாலத்தின்கட்டாயமாகும்.

(கட்டுரையாளர் ஓய்வுபெற்ற அரச மேலதிக பதிவாளர் நாயகம்)

காலைக்கதிர் Kalaikkathir

## பொதுத் தேர்தலில் வெளிப்படுத்தப்படும்

# தமிழரின் அரசியல் தீர்வுசார் நிலைப்பாட்டுக்கு எதிராக அமெரிக்கா ஒருபோதும் செயற்படாது

### கஜேந்திரகுமாரிடம் தூதுவர் ஜூலி சங் உறுதி





எதிர்வரும்பொதுத்தேர்தலில்அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்குப் புறம்பாக தாம் ஒருபோதும் செயற்படமாட்டோம் என இலங்கைக்கானஅமெரிக்கத்தூதுவர்ஜூலி சங்தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் உறுதியளித்துள்ளார்.

வடமாகாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் இலங்கைக்கானஅமெரிக்கத்தூதுவர்ஜூலி சங் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்யாழ்மாவட்டவேட்பாளர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள திண்ணை ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தமிழ் மக்கள் விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின்போக்குதொடர்பில்அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் கஜந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அவர், இவ்வரசாரங்கம் தேசிய மக்கள் சக்தியாக அடையாளப்படுத்தப்படினும், அரசியல் ரீதியான தீர்மானங்களைமேற்கொள்வதற்கானசகல அதிகாரங்களும்மக்கள்விடுதலைமுன்னணி வசமே இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் மற்றும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவினால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்தை மேற்கோள்காட்டிய கஜேந்திரகுமார், இவ்வாறானதொரு பின்னணியில் இந்த அரசாங்கத்திடமிருந்து முன்னேற்றகரமான நகர்வுகளை எதிர்பார்க்கமுடியும் எனத் தாம் கருதவில்லை எனவும் தெரிவித்தார்.

அதேபோன்றுஎதிர்வரும்பொதுத்தேர்தல் பற்றிய அமெரிக்கத்தூதுவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், 'ஏற்கனவே நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித்தேர்தலில் தெற்கில் பதிவான மாற்றம், எதிர்வரும் பொதுத்தேர்தலில் வட, கிழக்கு மாகாணங்களிலும்பதிவாகும். இருப்பினும்அம்மாற்றம் தேசிய மக்கள் சக்திக்கு சாதகமானதாக இருக்காது. மாறாக எமக்குச் சாதகமான, எம்மைநோக்கிய மாற்றமாகவே இருக்கும்' என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு 'கடந்த காலங்களைப் போலன்றி, நாம் பாராளுமன்றத்துக்குத் தெரிவானதில் இருந்து சகல தமிழ்த்தேசிய கட்சிகளும் 'தேசியம்' என்ற கொள்கையையும், முழுமையான சமஷ்டி தீர்வையும்முன்னிறுத்திசெயற்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே பொதுத்தேர்தலின் பின்னர் ஒற்றையாட்சி மற்றும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் என்பவற்றைப் புறக்கணித்து, முழுமையான சமஷ்டி தீர்வை சகலரும் வலியுறுத்தும் சாத்தியம் உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி இவ்வாறானதொரு சூழ்நிலை தோற்றம்பெறும் பட்சத்தில், அந்தக் கொள்கை மாற்றத்தை அமெரிக்கா அதன்கொள்கையில்உள்வாங்கவேண்டும் எனவும்,அதற்குஅவசியமானஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் எனவும் அமெரிக்கத்தூதுவரிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார்.

அதனை ஏற்றுக்கொண்ட அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், எதிர்வரும் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்குப் புறம்பாக தாம் ஒருபோதும் செயற்படமாட்டோம் எனவும் உறுதியளித்தார். (05)



# உறவுகள் பற்றிய உண்மையை அறிவதற்கான உரிமை அவர்களின் குடும்பங்களுக்கு உண்டு

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவினர்களை இன்னமும் தேடிவருகின்ற குடும்பங்களுக்கு, அவர்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்துக்கு உத்தியோகபூர்வவிஜயமொன்றை மேற்கொண்டிருக்கும்இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்தித்து, அவர்களதுநிலைப்பாடுகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

இச்சந்திப்பு குறித்து தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்'தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும்அமெரிக்கத்தூதுவர்ஜூலிசங், வலிந்து காணாமலாக் கப்பட்டோரின் குடும்பத்தினருடனான சந்திப்பை அடுத்து, அவர்களது கதைகளால் தான் மிகுந்த துயருற்றிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.



அதேவேளை, அவர்களது கதைகளைப் போலவே வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், தெற்கிலும் தான் சந்தித்து, கேட்டறிந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினரின் கதைகள், காணாமல்போன தமது உறவினர்களை இன்னமும் தேடிவருகின்ற, பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் உண்மை மற்றும் நீதிக்காகப் போராடிவருகின்ற தரப்பினரின் பெருந்துயரை வெளிக்காண்பித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாறு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சகல குடும்பங்களுக்கும் அவர்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை இருப்பதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய அறுவர் கைது

பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்னயக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

யக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பல்வேறு போதைப்பொருள்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெயாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 31, 33 மற்றும் 35 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்கள்மூவரும்கம்பஹாநீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சந்தேக நபர்களை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம்மேற்கொள்ளப்பட்ட விசாரணை யில், வெல்லம்பிட்டிய, மினுவாங்கொடை, தெமட்டகொடை, கிராண்ட்பாஸ் மற்றும் கிரிபத்கொடை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் திருடப்பட்ட 06 மோட்டார் சைக்கிள்கள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்,திருடப்பட்டதாகக் கூறப்படும்பல்வேறுபொருள்களை தன்வசம் வைத்திருந்த மேலும் மூன்றுசந்தேகநபர்கள்நுங்கமுவ மற்றும் பல்லேவெல ஆகிய பிரதேசங்களில்வைத்துயக்கலை பொலிஸாரால் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குபல்ஒலுவ மற்றும் பல்லேவெல பகுதியைச்சேர்ந்த 21, 23 மற்றும் 37 வயதுடையவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோரின் நினைவேந்தல்

## ஜனாதிபதி அநுரவையும் கலந்துகொள்ள அழைப்பு



ரத்தொலுவையில் ஞாயிறுக்கிழமை இடம்பெறவுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவுதின நிகழ்வுகளில் ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்கவும்கலந்துகொள்ளவேண்டும் என காணாமல்போனவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1988-89 ஆம் ஆண்டுகளில் ஜேவியின் கிளர்ச்சியின் போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் 33 வருடங்களாக நீதிக்காக போராடுகின்றனர். இந்த வருடம் 34 ஆவது வருடத்தை குறிக்கும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. ஜனாதிபதியை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜேவியின் இரண்டாவது கிளர்ச்சி காலத்தின் போது 60,000 இற்கும் அதிகமான இளைஞர்கள் கொல்லப்பட்டனர், கடத்தப்பட்டனர் அல்லது காணாமல்போயினர் எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் இது குறித்து விசாரணை செய்வதற்கான அரசியல் உறுதிப்பாடு முன்னைய அரசாங்கங்கள் எவற்றிடமும் இருந்ததில்லை என காணாமல்போனவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (05)




# கண்காணிப்பு விமானத்தை வழங்கியது ஆஸ்திரேலியா



இலங்கைக்கு பீச்கிராஃப்ட் கிங் ஏர் 350 350 என்ற ராயல் ஆஸ்திரேலிய விமானப்படை கண்காணிப்பு விமானத்தை ஆஸ்திரேலியா இலவசமாக வழங்கியுள்ளது.

இந்த விமானம் விமானப் படையின் வான்வழி கடல்சார் கண்காணிப்பு மற்றும் உளவுத் திறன்களைவிரிவுபடுத்துவதுடன், அமைதியான மற்றும் பாதுகாப்பான இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தைப்பேணுவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு பங்களிக்கும்.

ஆஸ்திரேலியா இந்த விமானத்தை இலங்கைக்கு வழங்கியமை, இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான கூட்டாண்மையை வலியுறுத்துவதோடு, மனித கடத்தலை தடுப்பதற்கும் பிராந்திய ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் கூட்டு அர்ப்பணிப்பைவலுப்படுத்துவதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.(05)

### ஆளும் தரப்புச் சரியாகக் கையாளாவிட்டால்

# தொழிற்சங்கங்களுடனான உறவு நிலைகள் பொருளாதார மறுசீரமைப்பைப் பாதிக்கும்

## அலி சப்ரி தெரிவிப்பு

தொழிற்சங்கங்களுடனான தமது உறவை அரசாங்கம் முறையாகக் கையாளாதுவிடின், அத்தொழிற்சங்கங்களால் வழங்கப்படும் அழுத்தம் பொருளாதார மறுசீரமைப்புக்களையும், வளர்ச்சியையும்அடைவதற்குமிகமுக்கியதடையாக மாறக்கூடும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி எச்சரித்துள்ளார்.

இதுகுறித்துதனதுஉத்தியோகபூர்வ'எக்ஸ்'தளத்தில் பதிவொன்றைச்செய்திருக்கும்முன்னாள்அமைச்சர் அலி சப்ரி, தற்போதைய அரசாங்கம் எதிரணியில் இருந்தபோது தொழிற்சங்கங்களின் ஆதரவால் பெரும்பயனடைந்திருக்கிறது. இருப்பினும்தற்போது அவர்கள்ஆட்சியில்இருக்கும்போதுஇந்தத்தொடர்பை மீள்வடிவமைத்து, உரியவாறு கையாளவேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டிருக்கிறது என அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இதனை முறையாகக் கையாளாதுவிடின், தொழிற்சங்கங்களால் வழங்கப்படும் அழுத்தமானது நாட்டில் பொருளாதார மறுசீரமைப்புக்களையும், வளர்ச்சியையும் அடைவதற்கு மிகமுக்கிய தடையாக மாறக்கூடும் எனவும் அலி சப்ரி எச்சரித்துள்ளார்.

ஆகவே தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கமும், தொழிற்சங்களும் நிலைமாற்றமடைந்திருக்கும் அவற்றின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் மிகையான புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(05)

# கிளிநொச்சி அக்கராயன் காட்டுக்குள் எறியப்பட்ட 10 ஆயிரத்துக்கும் அதிகமான விதைப் பந்துகள்



2024ஆம்ஆண்டுக்கானவிதைப்பந்துதிருவிழாவின் இறுதி மற்றும் பிரதான நிகழ்வாக வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அக்கராயனில் ஒதுக்கப்பட்ட காட்டினுள் விதைப்பந்துகள் வீசப்பட்டன.



ஓராயம் அமைப்பின் அனுசரணையுடன் கிளி/விவேகானந்த வித்தியாலயத்தால் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதன்போது விவேகானந்த வித்தியாலய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட விதைப்பந்துகள் அக்கராயன் காட்டுக்குள் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அதிகாரிகளாலும் எறியப்பட்டன.

இன்று உலகம் எதிர்கொள்கின்ற மிக ஆபத்தான பிரச்சினையாக காலநிலை மாற்றம் காணப்படுகிறது.

காடு அழிப்பு உட்பட எமது சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்புக்களின்விளைவாககாலநிலைமாற்றம்நிலவுகிறது.

எனவே, எமது சூழலைப் பாதுகாத்து, அடுத்த சந்ததியினருக்குகொடுப்பதற்காகவும்மாணவர்கள்மத்தியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

விதைப்பந்து வீசும் செயற்பாட்டில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அகமட், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் சி. லதீஸ்குமார், வன பாதுகாப்பு திணைக்களத்தின் வன விரிவாக்க உத்தியோகத்தர், கிளிநொச்சி மகா வித்தியாலய பிரதி அதிபர் அரவிந்தன், சூழலியலாளரும் இலங்கை வனவிலங்குகள் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் வட மாகாண பிரதிநிதியுமான ம.சசிகரன், ஊடகவியலாளரும் சூழலியலாளருமான மு. தமிழ்ச்செல்வன், கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம் மற்றும் கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் என பலர் இணைந்துகொண்டனர்.(05)

# இரத்தவாந்தி எடுத்தவர் யாழ்ப்பாணத்தில் சாவு

யாழ்ப்பாணத்தில் நபரொருவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் –

இவருக்கு நீண்ட வருடங்களுக்கு முன்னர் மின்சாரம் தாக்கியிருந்தது. அதன்பின்னர் இவருக்கு இடையிடையே வாந்தி ஏற்படுவது வழமை.

கடந்த 25ஆம் திகதியும் காலை 10 மணிக்கு இவருக்கு இரத்த வாந்தி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் 11 மணியளவில் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில்மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (05)

# யாழில் எலிக்காய்ச்சலால் இளம் குடும்பஸ்தர் இறப்பு

யாழில்எலிக்காய்ச்சல்காரணமாகஇளம்குடும்பஸ்தர் ஒருவர் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதில் சங்கரத்தையைச் சேர்ந்த 34 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபருக்கு கடந்த 21 ஆம் திகதி சுகவீனம் அடைந்ததை அடுத்து மறுநாள் சங்கானைப் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து குறித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த நபருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் எலிக் காய்ச்சலின் காரணமாக மரணம் சம்பவித்துள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. (05)




# தொடருந்து ஊழியர்களுக்கு இலவசப் பயண அனுமதி

அனைத்து ரயில் ஊழியர்களுக்கும் தாம் வசிக்கும் பகுதிக்கும் பணியிடத்திற்கும் இடையில் பயன்படுத்த இலவசரயில்பயண அனுமதி வழங்கப்பட உள்ளதாக போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில்போக்குவரத்து அமைச்சர் விஜித ஹேரத் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் ஊழியர்கள் தொடர்ந்து பொதுமக்களால் விமர்சிக்கப்படுவதை சுட்டிக்காட்டிய போக்குவரத்து அமைச்சகம், இந்நிலையை மாற்றும் நடவடிக்கையாக புதிய பயண அனுமதிச்சீட்டுவழங்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் வகையில், அனைத்து ரயில் ஊழியர்களையும் அவர்களின் செயல் திறனை மேம்படுத்த ஊக்குவிப்பதாகவும் அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.(05)

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த வாகனம் விபத்து



வாரியப்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதெனிய – அநுராதபுரம் வீதியில் தங்கஹமுல சந்தியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தவின் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றதை அடுத்து அங்கிருந்த பொது மக்களுக்கும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வாக்குவாதம் முற்றியதில் இரு தரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், விபத்துக்குள்ளான வாகனத்தில் பல ஆயுதங்கள் காணப்பட்டன எனவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வாரியப்பொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## ஜேவிபி. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிக் கூட்டமைப்பாக முன்னர் இருந்த சித்தார்த்தன், அடைக்கலநாதன் தொடக்கம் சுமந்திரன் வரை ஐ.நாவிலே உள்ளகப் பொறிமுறைக்காகப் பேசியவர்களே, 13ஐ ஏற்றுக்கொண்டு மாகாண சபைத் தேர்தலை அங்கும் வலியுறுத்தியவர்களே!

நூற்றுக்கணக்கான குழுக்களும் அரசியல் கட்சிகளும் இந்தத் தேர்தலிலே பிரிந்து இருந்தாலும்கூட, கொள்கை என்று வருகின்றபோது இரண்டே இரண்டு நிலைப்பாடுகள்தான்உள்ளன.பொறுப்புக்கூறல் மற்றும் தீர்வு விடயங்களிலும் இரண்டே இரண்டு நிலைப்பாடுகள்தான் இருக்கின்றன.

தீர்வை விடயத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே உள்ளனர். ஏனைய அனைத்துத் தரப்பினரும் ஒற்றையாட்சிக்குள் 13ஐ அல்லது ஏக்கிய இராட்சியத்தை ஏற்றுக்கொண்ட தரப்பினரே!

தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலே வருகின்ற சுமந்திரன், சிறீதரன் அணிகளாக இருக்கலாம் அல்லது சங்குச் சின்னத்தில் வருகின்ற சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப்போராளிகள்கட்சியாகஇருக்கலாம் அல்லது மான் சின்னத்திலே வருகின்ற 'சாராயக்கடை அனுமதி' விக்னேஸ்வரன் கும்பலாக இருக்கலாம். அனைவருமே இந்த 13 மற்றும் ஏக்கிய இராட்சியத்தை ஏற்றுக்கொண்டவர்கள். எல்லோரும் உள்ளக விசாரணையைக் கோருபவர்கள். இனப்படுகொலையாளிகளுக்கு எதிராக சர்வதேச விசாரணையை வேண்டாம் என்று கூறுபவர்கள்.

இங்கு எம் மீது நடத்தப்பட்டது ஒரு இனப்படுகொலை, அதற்குச் சர்வதேச விசாரணைவேண்டும்என்றுவலியுறுத்துகின்ற ஒரேயொரு தரப்பு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்ந்த அணி மாத்திரம்தான்.

கொள்கையோடு உள்ள கஜேந்திரகுமார் அணியினரை மக்கள் கண்டுவிடக்கூடாது, அதைக் குழப்பவேண்டும் என்பதற்காக மட்டும்தான்இத்தனைகட்சிகளும்,குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதனை மக்கள் விளங்கிக்கொண்டு அனைத்துத் தரப்புக்களையும் புறக்கணிக்கவேண்டும்.

ஜே.வி.பி. தொடர்பாக தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். 1994 ஆம் ஆண்டில் இருந்து தொடர்சியாகக் குற்றச் செயல்கள் புரிந்து ஆட்சியாளர்களுடன் இணைந்து இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்த ஈ.பி.டி.பியை ஜனாதிபதி அநுர அணைக்கின்றார் என்றால் இதற்குப் பிறகும் வடக்கு, கிழக்கில் அநுர ஊழலைக் கட்டுப்படுத்துவார் என்று நாங்கள் யாராவது நம்புவோமாக இருந்தால் எம்மைப் போன்ற அடிமுட்டாள்கள் வேற யாரும் இருக்க முடியாது.

இனியும் தமிழ் மக்கள் ஏமாறாமல் கஜேந்திரகுமார்பொன்னம்பலத்துக்குப்பின்னால் அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் -- என்றார்.

## பருத்தித்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குப் பின்புறமாக இருக்கும் காணியில் நீண்டகாலமாகப் பாவனையற்றிருந்த கிணற்றை நேற்றுத் துப்பரவு செய்தபோது இந்தக் குண்டுகள் மீட்க்கப்பட்டன.

போர்ச்சூழல்காரணமாக35வருடங்களாக பாவனையற்றிருந்த இந்தக் காணியை உரிமையாளர்கள் தற்போது துப்புரவு செய்து



வருகின்றனர். மீட்கப்பட்ட கைக்குண்டுகள் செலிழக்கச் செய்யப்படுவதற்காகப் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டன.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# 34 வருடங்களின்பின் மீள காங்கேசனில் அஞ்சலகம்




காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகம் சுமார் 34 வருடங்களின் பின்னர் மீண்டும் காங்கேசன்துறையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு கால பகுதியில் காங்கேசன்துறை பகுதியில் இருந்து மக்கள் வெளியேறிய போது, அங்கு இயங்கி வந்த காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகமும் வெளியேறி இருந்தது.

இந்நிலையில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக காங்கேசன்துறை பகுதி இருந்த மையால்மாவிட்டபுரம்பகுதியில்தற்காலிகமாக அஞ்சல் அலுவலகம் இயங்கி வந்தது.

தற்போது மீண்டும் காங்கேசன்துறை பகுதியில் அஞ்சல் அலுவலகம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

காங்கேசன்துறை-பருத்தித்துறைவீதியில் சொந்த காணியில் அஞ்சல் அலுவலகம் அமைந்திருந்த போதிலும் மீண்டும் அதில் அஞ்சல்அலுவலகம்இயங்ககட்டடவேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளமையால் அதற்கு பாரிய நிதி செலவு காணப்படுகிறது.

அதனால் காங்கேசன்துறை பகுதியில் தனியார் கட்டடம் ஒன்றினை தற்காலிக வாடகைக்கு பெற்று அதில் குறித்த அஞ்சல் அலுவலகம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

(05)








# மலேசியாவில் உலக தமிழ் வம்சாவளி மாநாடு: அந்தமான் சுற்றுலாத்துறைக்கும் அழைப்பு



மலேசியாவில் உள்ள பினாங்கில் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள 11 ஆவது ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து தமிழர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அந்தமான் தமிழ் சங்கம், அந்தமான் சேம்பர் ஒப் கமர்ஸ் பல்வேறு தமிழ் அமைப்புகளை உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பினர் நேரில் சென்று இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கான அழைப்பினை விடுத்து வருகின்றனர்.

இதில் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் சுற்றுலாத்துறையை அழைக்கும் விதமாக வெள்ளிக்கிழமை அதன் தலைமைச் செயலகத்தில் தலைமை செயலாளரை உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் மற்றும் அந்தமான் நிக்கோபார் தலைவர் முருகன் சந்தித்து அழைப்பு விடுத்துள்ளார்.

அதில் ஏர் ஏசியா விமான நிறுவனம் நவம்பர் 16ஆம் திகதி முதல் அந்தமானில் இருந்து மலேசியாவுக்கு விமானத்தை இயக்கவுள்ளது.

அதன் மூலம் அந்தமான் நிக்கோபார் தீவில் உள்ள மக்கள் மலேசியா செல்லவும் மலேசியாவில் உள்ள மக்கள் அந்தமான் தீவில் விடுமுறை நாள்களை கழிக்கவும் பயண ஏற்பாட்டாளர்களை சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அந்தமானில் இருந்து ஏர் ஏசியா விமானம் மூலம் பயணிக்கவுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பயண ஏற்பாடு மற்றும் உதவிகளை செய்ய அந்தமானில் உள்ள உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் முருகன் பொறுப்பேற்றுள்ளதாக உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் தெரிவித்துள்ளார். (05)

# மாணவி மீது பாலியல் துஸ்பிரயோகம்; மேலதிக வகுப்பு ஆசிரியர் கைதானார்

14 வயது மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என லுனுகம்வெஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, லுனுகம் வெஹெர பிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடைய மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் லுனுகம்வெஹெர பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிலும் ஆசிரியராகக் கடமையாற்றி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தனது மேலதிக வகுப்புக்கு வருகை தந்த 14 வயது மாணவி ஒருவரைப் பல மாத காலமாக பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுனுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மன்னார் பரப்புக்கடந்தான் கிராமத்தில் ஆண் யானை இறந்த நிலையில் மீட்பு

## ஒருவர் கைது

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரப்புக்கடந்தான் கிராமத்தில் சுமார் 15 வயது மதிக்கத்தக்க ஆண் யானை ஒன்று உயிரிழந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த யானை அண்மைக்காலமாக பரப்புக் கடன்தான் பகுதியில் பல விவசாய நிலங்கள் மற்றும் விவசாய காணிகளில் சுற்றித்திரிந்த தாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த யானை வியாழக்கிழமை இரவு உயிரிழந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யானை இறந்த இடத்திற்கு வருகை தந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த யானை சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்ட மின்சார



வேலியில் சிக்குண்டு இறந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

இறப்பு சம்பவம் தொடர்பில் மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்; எனத் தெரியவருகிறது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2024இல் வெளியிடப்பெற்றது